நாட்களுக்குள்ளாக அந்த நீதிமன்றமும், அதைப்போலவே காமராசர் மாவட்ட நீதிமன்றமும், பசும்பொன் மாவட்ட நீதிமன்றமும் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சில பகுதிகளில் யானைக் கால் நோயினால் ஏற்பட்டுள்ள பாதிப்பைத் தடுக்க மருத்துவ வசதிகள் அளிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து ஒரு கவன ஈர்ப்பை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டத்தில் வெகு வேகமாகப் பரவி வரும் யானைக்கால் நோயினால் குறிப்பாக கருங்கல், புதுக்கடை, தலக்குளம், களியக்காவிளை, நட்டாலம் திருவிதாங்கோடு, இரணியல் ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக் கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதைத்தடுக்க வெகு விரைவில் அரசு அதிரடி நடவடிக்கை மேற்கொள்ள தயாராக இருக்கிறதா என்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

கன்னியாகுமரி மாவட்ட மக்கள் தொகை 16,51,800-ல் 4,27,239 பேர்கள் யானைக்கால் நோய் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய பகுதிகளில் வாழ்கின்றனர் என்று தீவிர ஆய்வுக்குப்பின் கண்டறியப்பட்டது.

அவர்களில் 3,10,574 பேர்களிடம் இரவு நேரங்களில் ரத்தம் எடுத்து அதில் மைக்ரோ பைலேரியா நுண்கிருமிகள் இருக்கின்றனவா என்று சோதனை செய்யப்பட்டது. அதில் 5386

TRUTH ALONE TRIUMPHS

1991 ஜூலை 12] [திரு. சு. முத்துசாமி]

பேர்களிடம் யானைக்கால் நோய் மைக்ரோ பைலேரியா நுண் கிருமிகள் பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் 2,020 பேர்கள் யானைக்கால் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர். கருங்கல், புதுக்கடை, தலக்குளம், களியக்காவிளை, நட்டாலம். திருவிதாங்கோடு, இரணியல் ஆகிய பகுதிகளில் மைக்ரோ பைலேரியா சர்வே செய்ததன் முடிவு பின்வருமாறு :—

12 பிப்ரவரி 1987 முதல் 15 மே 1987-ல் சர்வே செய்து கருங்கல் கிராமத்தில் சேகரித்த குருதியாடிகள் செய்யப்பட்டதில், 48 பேருக்கு பாசிட்டிவ் மைக்ரோ பைலேரியா இருந்தது என்றும், 17 பேர் யானைக்கால் நோய்க்கண்டவர்கள் என்றும், இதே போல் புதுக்கடை கிராமத்தில் 12, மே 1981 முதல் 15 மே 1987 வரையிலும் 21 சூலை 1989 முதல் 25 சூலை 1989 வரையிலும் சர்வே செய்ததில் 1,501 பேருக்கு குருதியாடி செய்யப்பட்டதில் 104 பேருக்கு பாசிடிவ் மைக்ரோ பைலேரியா இருந்தது எனவும், 64 பேர் யானைக்கால் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் என்றும் தெரிய வந்தது. 9 சனவரி 1988 முதல் 31 மார்ச்சு 1988 வரை களியக்காவிளையில் சர்வே செய்ததில் 3,218 பேருக்கு குருதியாடிகள் செய்யப்பட்டதில் 62 பேருக்கு பாசிடிவ் மைக்ரோ பைலேரியா இருந்தது என்றும் 7 பேர் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்றும் தெரிய வந்தது. நட்டாலம் கிராமத்தில் 4/87 முதல் 5/88, ஏப்ரல் 1987 முதல் மே வரையில் சர்வே செய்ததில் 1,468 பேருக்கு குருதியாடிகள் செய்யப்பட்டதில் 91 பேருக்கு பாசிடிவ் மைக்ரோ பைலேரியா இருந்தது மற்றும் 41 பேர் யானைக்கால் நோயினால் பாதிக்கப்பட்டனர். 15 ஏப்ரல் 1986 முதல் 29 டிசம்பர் 1986 வரையிலும் 29 ஆகஸ்ட் 1988 முதல் 13 பிப்ரவரி 1989 வரையிலும் அதன்பின் 7, செப்டம்பர் 1990 லும் திருவிதாங்கோடு கிராமத்தில் சர்வே செய்ததில் 15,783 பேர்களுக்கு குருதியாடிகள் செய்யப்பட்டது என்றும் 578 பேருக்கு பாசிட்டிவ் மைக்ரோ பைலேரியா இருந்தது என்றும் 341 பேர் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்றும் 20 ஏப்ரல் 1987 முதல் 15 மே 1987 வரையிலும் பின்னர் 23 நவம்பர் 1990 லும் இரணியல், தலைக்குளம் முதலிய கிராமங்களில் சர்வே செய்ததில் 3,011 பேருக்கு குருதியாடிகள் செய்யப்பட்டது. 151 பேருக்கு பாசிடிவ் மைக்ரோ பைலேரியா இருந்தது என்றும் 108 பேர் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்றும் தெரியவந்தது. இந்நோய்க்கான அறிகுறிகள் காணப்பட்டவர்களுக்கும், நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சிகிச்சையளிக்க ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நோயின் தன்மையைத் தெரிந்து கொள்ளாத ஒரு சிலர் சிகிச்சை எடுத்துக்கொள்ள மறுக்கின்றனர். அத்தகையவர்களுக்கு

நோயின் தன்மையை விளக்கியும், சுகாதாரக் கல்வி போதித்தும் சிகிச்சை எடுத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டு வருகின்றார்கள். அவர்கள் ஆரம்ப சுகாதார திட்டத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

1/3 மானியத்துடன் யானைக்கால் நோய்த் தடுப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுவரும் நாகர்கோவில் நகராட்சி (மதிப்பீட்டுத்தொகை ரூ. 34,000) புதுக்கடை (மதிப்பீட்டுத் தொகை ரூ. 3,800) விளவங்கோடு (திட்டம் செயல்படுத்தப்பட வில்லை) இரணியல் (மதிப்பீட்டுத் தொகை ரூ. 20,700) மற்றும் திருவிதாங்கோடு (மதிப்பீட்டுத் தொகை ரூ. 4,500) ஆகிய பேரூராட்சிகளில் இத்திட்டத்தின் செயல்திறன் தீவிரப்படுத் தப்பட்டுள்ளது.

நாகர்கோவிலில் செயல்பட்டுவரும் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டப் பிரிவின் செயல் திறனும் பத்மநாபபுரம், குளச்சல், குழித்துறை ஆகிய இடங்களில் செயல்பட்டுவரும் 3 இரவு சிகிச்சைப் பிரிவுகளின் செயல் திறனும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பணிபுரியும் எல்லா பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்களுக்கும் யானைக்கால் நோயைக்கண்டு பிடிக்கும் முறையையும் அந்நோயின் அறிகுறிகள் காணப்பட்டவர்களுக்கும், நோயினால் பாதிக்கப்பட்டவர் களுக்கும், எவ்வாறு சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்பதற்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. அவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்டதனால் யானைக்கால் நோயினால் பாதிக் கப்பட்டவர்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பத்மநாபபுரத்தில் ஒரு நோய்த்தடுப்புப் பிரிவும், குழித் துறையில் ஒரு நோய் தடுப்புப் பிரிவும் புதிதாக நிறுவப்பட்டுள்ளது. இவ்வாறாக இம்மாவட்டத்தில் பெருகிவரும் யானைக்கால் நோயைத் தடுத்திட தீவிர நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. மற்றும் இனியும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதா :

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிலே 16 லட்சத்து 51 ஆயிரத்து 800 மக்கள் தொகையைக் கொண்ட கன்னியாகுமரி மாவட்டத் தில் 4 லட்சத்து 27 ஆயிரம் பேர்கள் இந்த நோய் அதிகமாக பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய பகுதிகளில் வாழ்ந்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் தந்திருக்கின்ற புள்ளிவிவரத்தின் அடிப்படையில் கிட்டத்தட்ட

9,000 பேர் நேரடியாகவே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த மாவட்ட மக்களிடையே இந்த நோய் வேகமாக பரவுவதைத் தடுக்கிற முகத்தான் அங்சே யானைக்கால் நோய் தடுப்பு முகாம்களை பெரிய அளவில் நிறுவி, அந்த நோய் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் பரவாமல் தடுப்பதற்கான முழு முயற்சியை எடுக்கவும், தனியாக அதற்கு ஒரு மருத்துவமனை அமைத்துத் தரவும் மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த நோய் பாதிக்கப்பட்டவர்கள் 2,020 பேர்கள். நோய் பாதிக்கப்படக்கூடும் அறிகுறி காணப்பட்டவர்கள் 5,386 பேர்கள். எனவே, இந்த 5,386 பேர்களுக்கு நோய் தடுக்கப்பட வேண்டும். இப்போது நோய் வந்திருக்கிற 2,020 பேர்களை குணப்படுத்த வேண்டுமென்று அந்தப் பகுதியில் 3 இடங்களில் அமைக்கப்பட்டிருக்கிற மருத்துவ முகாம்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றன. எனவே, இன்னும் துரிதப்படுத்தி இந்த நோயை அங்கேயிருந்து அறவே நீக்குவதற்கு அரசாங்கம் முழு முயற்சிகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

9-45 மணி

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே, இந்த யானைக்கால் நோயைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்ட நபருக்கு மருத்துவ முறையில் முழுமையாக மாற்றிவிட முடியும், குணப்படுத்த முடியும் என்று சொல்கிற கருத்து அவ்வளவு ஒத்த கருத்தாக எனக்குத் தெரியவில்லை. எனவே இப்படிப்பட்ட பாதிப்புகள் ஒட்டுமொத்தமாக வராத விதத்தில் தடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இங்கே கொடுக்கப்பட்டு இருக்கிற மதிப்பீடு ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு என்ற குறிப்பினைத் தந்திருக்கிறார்கள். மாவட்டம் முழுவதற்குமாக கிட்டத்தட்ட 5 முகாம்கள் வைத்து, அதற்காக நாங்கள் நோய் வராமல் தடுக்கிறோம் என்ற விவரத்தை தந்திருக்கிறார்கள். எவ்வளவு தெரியுமா? அந்த மொத்தத் தொகை, கிட்டத்தட்ட 63 ஆயிரம் ரூபாய். இதை வைத்து, அத்தனை பேர்களுக்கும் மருத்துவம் செய்து, நோயைக் குணமாக்கி மாவட்டம் முழுவதும் உள்ள மக்களை காப்பாற்ற முடியுமா என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே இதைப்பற்றி கடந்த அரசாங்கத்திலே கேட்டிருந்தால் கொஞ்சம் அதிகமான பணம் கூட ஒதுக்கியிருக்கலாம். அப்போது வேண்டாம் என்று விட்டு விட்டார்கள் என்று கருதுகிறேன். இந்த அரசாங்கம் இப்போதுதான் பொறுப்பேற்றிருக்கிறது. எனவே இதற்கான நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளும்.

3. அறிவிப்பு

கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1991, (ஆ), (இ).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்''.

4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.